1. **அறிமுகம்;**

2014 ஆம் ஆண்டின் ஏ பி ஆர் சட்டத்திற்கு ( 2014 ஆம் ஆண்டின் ஆறாம் சட்டம் ) 2014 மார்ச் முதல் தேதியன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. ஆந்திரப்பிரதேசத்தை தெலுங்கானா மாநிலம் மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலம் என்று பிரிக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் தேதி நியமன நாளாக அறிவிக்கப்பட்டது.

2, **ஐக்கிய முற்போக்கு அரசாங்கம் பின்பற்றிய அறிவியல்பூர்வமற்ற நடவடிக்கைகள்**

முக்கியமான நபர்களின் போதுமான மற்றும் தீவிரமான ஆலோசனையின்றியும், முக்கிய அரசியல் கட்சிகளின் கருத்தொற்றுமையின்றியும், வெளிப்படைத்தன்மையின்றியும், மர்மமான முறையில் மசோதா வரையப்பட்டது. மக்களின் தீவிரமான எதிர்ப்பையும் மீறி, அவர்களின் உணர்வுகள் மற்றும் ஆசைகளுக்கு குறைவான மதிப்பளித்தது. இதனால் ஆந்திரப்பிரதேச மக்களிடையே பெருத்த ஏமாற்றத்தை உண்டாக்கியது.

**3, ஆந்திரப்பிரதேசத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி**

புனரமைப்பு சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் மற்றும் GoI எடுத்த நடவடிக்கைகளினால் ஆந்திரப்பிரதேசத மாநிலத்திற்கு ஏற்பட்ட அநீதிகள்

**அ,** எதிர்ப்பார்க்கப்பட்ட ஓட்டுமொத்த மாநில வருவாயில் மாநிலம் 46 சதவிகிதம் மட்டுமே பெறுகிறது, அதே நேரத்தில் இதற்கு 58 சதவிகித மக்கள் தொகை உள்ளது என்பதை 14–ஆவது நிதி ஆணையம் உறுதி செய்துள்ளது.

**ஆ**, இடங்களின் அடிப்படையில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன ஆனால் கடன் பொறுப்பு மக்கள்தொகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது

**இ,** மின்சாரத்துறையில், மின்சார நுகர்வு விநியோக அடிப்படையில் பின்பற்றப்பட்டது, இது ஆந்திரப்பிரதேச மாநிலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடியதாகும்.

**ஈ,** மக்கள்தொகை அடிப்படையில் ஆத்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானாவிற்கு இடையில் வரிகள் திருப்பியளிக்கப்படுகின்றன ( 58.32;41.68) ஆனால் அதே நேரத்தில் இடத்தின் அடிப்படையில் தாமதமாகியுள்ள வரி வசூல் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 3,800 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**உ,** ஆந்திரப்பிரதேச மாநிலத்திற்கு தலைநகர் இல்லை

**ஊ,** பிரிக்கப்படாத கடன் பொறுப்பு 33,478 கோடி ரூபாய்க்கும் மேல் ஆந்திரப்பிரதேசத்தின் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது, இதனால் மாநிலத்திற்கு சுமை அதிகரித்துள்ளது. இதனால் ஆந்திரப்பிரதேசத்திற்கான FRBM எனப்படும் நிதி பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மைக்கான வரம்பில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**எ,** 9-ஆவது அட்டவணை நிறுவனத்தில் சிங்கரேனி நிலக்கரி சுரங்கம் இருந்தாலும், அந்நிறுவனத்தினுடைய இடத்தின் அடிப்படையில் நிகரமதிப்பு 51 சதவிகிதம் டி எஸ்ஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் துணை நிறுவனமான APHMEL ஆந்திரப்பிரதேசத்தில் அமைந்திருந்தாலும், அது 9-ஆவது அட்டவணை நிறுவனத்தில் இருந்தாலும் அதே போன்று அளிக்கப்படவில்லை.

**ஏ,** மின்சார ஒதுக்கோடு நுகர்வின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

4, **அமல்படுத்துவதன் நிலைமை**

இந்த சட்டத்தின் முக்கிய பிரிவுகளில் ஆறு உறுதிமொழிகள் உள்ளன. அதில் எதுவும் முழுமையான அமல்படுத்தப்படவில்லை. 4 உறுதிமொழிகள் பாதியளவு அமல்படுத்தப்பட்டுள்ளது மேலும் 2 உறுதிமொழிகள் ( க்ரே ஹவுண்ட்ஸ் பயிற்சி மையம் மற்றும் ஆந்திரப்பிரதேச சட்டப்பேரவையின் இடங்களை அதிகரிப்பது ) அமல்படுத்தப்படவில்லை. மேலும் XIII, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மொத்தம் 11 கல்வி நிலையங்களில், 9 கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த கல்வி நிலையங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்புக்காக 11,673 கோடி ரூபாய் தேவைப்படும் நிலையில், இந்திய அரசு 638.19 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளது. மற்றொரு புறம் மாநில அரசு 11,714 கோடி ரூபாய் செலவில் 2911.52 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது. இந்த நிலங்களை பாதுகாக்க 131.33 கோடி ரூபாயை விடுவித்துள்ளது. கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குவதற்கான 8 உறுதிமொழிகளில் 3 வெறும் தொடக்க நிலையிலேயே உள்ளன மேலும் ஐந்து அமல்படுத்தப்படவில்லை.

IX-ஆம் அட்டவணையில் 89 நிலையங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது, அதில் 41 நிலையங்களுக்கான உத்தரவுகளை நிபுணர் ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மாநில அரசு பிறப்பித்துள்ளது. ஆனால் தெலுங்கானா அரசாங்கத்தின் ஒத்துழைப்பில்லாததால், ஒரு நிலையம் கூட பிரிக்கப்படவில்லை

X அட்டவணையில் 142 நிலையங்கள் இருந்தாலும் ஒரு நிலையம் கூட இதுவரை பிரிக்கப்படவில்லை.

கிருஷ்ணா நதி மேலாண்மை வாரியம் மற்றும் கோதாவரி நதி மேலாண்மை வாரியத்திற்கான நீதி எல்லைகளை அறிவிப்பது தொடர்பாகவும் இந்திய அரசிடம் நிலுவையில் உள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள ஷரத்துக்களுடன் கூடவே, மாண்புமிகு பிரதமர் 20. 02.2014 அன்று மாநிலங்களவையில் ஆறு உறுதிமொழிகளை அளித்தார். அவற்றில் ஐந்து உறுதிமொழிகள் பாதியளவு அமல்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு பிரிவு அந்தஸ்து தொடர்பான உறுதிமொழி அமல்படுத்தப்படவில்லை.

5, **ஆந்திரப்பிரதேச புனரமைப்பு சட்டம் 2014-ஐ அமல்படுத்த ஆந்திரப்பிரதேசம் எடுத்த முன்முயற்சிகள்**

ஆந்திரப்பிரதேச புனரமைப்பு சட்டம் 2014 மற்றும் அப்போதைய பிரதமர் அளித்த உறுதிமொழிகளை முறையாக அமல்படுத்த ஆந்திரப்பிரதேச

அரசாங்கம் பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த விவகாரங்களை விரைவில் தீர்ப்பதற்கும் உறுதிமொழிகளை அமல்படுத்தவும் பல முறை பிரதமர் மற்றும் பிற மத்திய அமைச்சர்களுக்கு எழுத்துப்பூர்வமாகவும்,பிரதிநிதிகள் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரங்களை தீர்ப்பதற்கு பல ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மூலம் தலைநகர் வளர்ச்சிக்காக நில பரிமாற்ற முறைப்படி 33,00 ஏக்கர் நிலம் பெறப்பட்டது. நாடாளுமன்றத்தில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், நாடாளுமன்றத்தில் TDP கட்சி மக்களவையின் கடந்த இறுதி அமர்வில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தது. மத்திய கேபினட் அமைச்சரவையில் இருந்து TDP கட்சியினர் ராஜினாமா செய்தனர் மேலும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசிற்கான ஆதரவை TDP கட்சி விலக்கிக்கொண்டது. மாநிலத்தில் ஒவ்வொரு மாதமும் தர்ம போராட்ட தீக்ஷா ஒருங்கிணைக்கப்படுகிறது. சட்டத்தின் 66–ஆம் பிரிவின் கீழ், ஆந்திர பவனில் உள்ள சொத்துக்களை பிரிப்பது தொடர்பான சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு ஏற்பட ஆந்திரப்பிரதேச அரசாங்கம் மேற்கோள் காட்டியுள்ளது.

6, **அரசியல் சாசன முறைக்கும், அதிகாரிகளுக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அவமரியாதை செய்துள்ளது.**

X –ஆவது அட்டவணையில் உள்ள நிலையங்கள் தொடர்பான மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை அமல்படுத்தாமலும், சிறப்பு பிரிவு அந்தஸ்தை ஆந்திரப்பிரதேசத்திற்கு வழங்குவது தொடர்பாக, மாநிலங்களவையில் பிரதமர் அப்போது கொடுத்த வாக்குறுதிகளை அமல்படுத்தாமலும், வருவாய் பறாக்குறை தொடர்பாக சி ஏ ஜி அளித்த சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுத்தும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அரசியல் சாசன முறைக்கும், அதிகாரிகளுக்கும் அவமரியாதை செய்துள்ளது.

7, **உடைந்த வாக்குறுதிகள்**

ஆந்திரப்பிரதேச புனரமைப்பு மசோதாவை மாநிலங்களவையில், பத்தாண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றும் போது, ஆந்திரப்பிரதேசத்திற்கான சிறப்பு பிரிவு அந்தஸ்திற்காக, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பரிந்து பேசியது. மேலும் 2014 ஆம் ஆண்டின் சீமாந்திரா தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிட்டது.

ஆனால் இப்போது சிறப்பு பிரிவு அந்தஸ்து அளிக்க முடியாது என்று கூறுகிறது. பிஜேபி தன்னுடைய தேர்தல் அறிக்கையில், வருவாய் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு உறுதியளித்தது மேலும் KBK-வுக்கான பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சி பேக்கேஜ்ஜிற்கு அனுமதி அளித்தல், பண்டேல்கண்ட் மாடல் ஆகியவையும் அமல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு பிரதமர் திருப்பதி, நெல்லூர் நகரங்களில் தேர்தல் பிரச்சாரத்தில், ஆந்திரப்பிரதேசத்திற்கு 10 ஆண்டுகள் சிறப்பு பிரிவு அந்தஸ்திற்கும் தில்லியை விட சிறந்த தலைநகரை உருவாக்க உதவி செய்வதாகவும் உறுதியளித்தார், அதுவும் அமல்படுத்தப்படவில்லை.

8, **யுடிலைசேஷன் சர்டிபிகேட்டிற்கான நிலை**

2014 ஆம் ஆண்டின் ஆந்திரப்பிரதேச புனரமைப்பு சட்டத்தின் பல்வேறு ஷரத்துக்களின் படி, ஆந்திரப்பிரதேச அரசிற்கு இந்திய அரசு 12895.06 கோடி ரூபாயை விடுவித்துள்ளது. அதற்கான யுடிலைசேஷன் சர்டிபிகேட் தொகையாக 11673.44 கோடி ரூபாய் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**9, மாநில பொருளாதாரத்தின் நிலை**

2014 ஆம் ஆண்டின் ஏ பி ஆர் சட்டத்தை அமல்படுத்துவதற்கு பகைமைகளும், இந்திய அரசின் தயக்கம் இருந்தாலும் கூட, மாநில அரசு கடுமையாக உழைத்து, மாநலத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்த குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளது.

**அ**, 2014-15 ஆம் ஆண்டில் 6,891 கோடி ரூபாயாக இருந்த மூலதன செலவுகளை மாநில அரசு மும்மடங்காக்கி 2017-18 ஆம் ஆண்டில் 22,875 கோடி ரூபாயாக மாற்றியுள்ளது.

**ஆ**, வரவுகளை மாநில அரசு அதிகரிக்கவும், GSDP வளர்ச்சி மற்றும் மூலதன செலவுகளை அதிகரிக்க, தலைநகரை கட்டமைக்க அதிக அளவில் நிதி தேவைப்படுகிறது. நிதி வளங்களை மாநில அரசு முடுக்கியுள்ளது. இதனால் கடன் அதிகரித்து, நிதி மற்றும் வருவாயில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

**இ**, 14-ஆவது நிதி ஆணையம் நிறைவடைந்ததற்கு பிறகும், வருவாய் பற்றாக்குறை கொண்டிருக்கக்கூடிய சிறப்பு பிரிவு அல்லாத மாநிலங்களில் உள்ள ஒரேயொரு மாநிலமாக ஆந்திரப்பிரதேசம் இருக்கும். அதாவது, 2020-க்கும் பிறகும்.

**ஈ,** ஐக்கிய ஆந்திரப்பிரதேசத்தின் ஒட்டுமொத்த கடன் நியமன நாளில் அதாவது 2.6.2014-ல் 2,00,171 கோடி ரூபாயாகும். இதில் பங்கிடப்படாத கடன் 33,478 கோடி ரூபாய் மீதமாகும். மாநிலத்திற்கான மிகப்பெரிய பங்கு 97,177 கோடி ரூபாயாகும். இதில் மொத்த கடன் 31.3.2018 வரை GSDP-யில் 28.40 சதவிகிதமாகும். இதில் பதினான்காவது நிதி ஆணையம் நிச்சயித்தது 24.74 சதவிகிதமாகும்.

**உ.** சிக்கலான கடன் சுமை இருந்தாலும், மாநில அரசு ஒட்டுமொத்த மாநில நலன்களுக்காகவும், வளர்ச்சிக்காவும் கடுமையாக உழைத்து வருகிறது. இந்த மூன்றாண்டுகளில் மாநில அரசு நலத்திட்ட ஓய்வூதியத்திற்காக 14,470 கோடி ரூபாயை செலவிட்டுள்ளது. கடன் மீட்பிற்காக 11,374 கோடி ரூபாயையும், சுய உதவி குழுக்களுக்காக 6,799 கோடி ரூபாயையும், நீர்ப்பாசனத்திற்காக 28,269 கோடி ரூபாய்களையும், அரிசி மானியத்திற்காக 6,110 கோடி ரூபாயையும் செலவிட்டுள்ளது. இதன் மொத்த செலவினங்கள் 66,971 கோடி ரூபாயாக உள்ளது.

**ஊ,** பல்வேறு துறை பொருளாதாரத்தின் வளர்ச்சி தொடர்பாக, மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் உறுதிப்பாட்டுக்கும் சான்றளிப்பதாக அனைத்திந்திய வளர்ச்சி விகிதங்கள் உள்ளன.

**10. முன்னோக்கி செல்லுதல்**

மேற்சொன்ன உறுதிமொழிகளை அமல்படுத்த, நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் மாநில அரசு, இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும். மேலும் இந்த துயரங்களை நிவர்த்தி செய்ய சட்டப்பூர்வமான அமைப்புக்களிடம் முறையிடப்படும்.

- மத்திய உதவிக்காக, ஆந்திரப்பிரதேசத்திற்கு பிறகு வரும் 13 மாவட்டங்களை உள்ளடக்கிய மாநிலத்துக்கு, ஐந்தாண்டுகளுக்கு சிறப்பு பிரிவு அந்தஸ்து நீட்டிக்கப்படும். இதனால் மாநிலத்தின் நிதி வலுவாக காலூன்றும்.

- தொழில்துறையை ஊக்கப்படுத்தவும், இருமாநில பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மாநிலங்களுக்கு வரி சலுகைகள் உள்ளிட்ட தேவையான நிதி நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என்று மசோதா ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. பிற மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வகையில் இந்த சலுகைகள் இருக்கும்.

- ஆந்திரப்பிரதேசத்தின் அடுத்த மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளுக்கான சிறப்பு வளர்ச்சி திட்டங்களை மசோதா குறிப்பிடுகிறது. இது ஒடிஷாவின் ( கோராபுட்-போலங்கீர்-காலஹண்டி) மற்றும் மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசத்தின் பண்டேல்கண்ட் போன்ற இந்த வளர்ச்சி பேக்கேஜ்கள் இருக்கும்.

- போலாவரம் திட்டத்திற்கான முழு புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்த்தலுக்கு சுமூகமான நடவடிக்கை எடுக்க தேவையான திருத்தங்கள் விரைவிலேயே அளிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மீண்டும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

- நபர்கள், நிதி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திருப்திகரமாக முடிவடைவந்து தயார் பணிகளுக்காக, புதிய மாநிலம் அமைவதற்கான நியமன நாளை நிச்சயிப்பது தொடர்பாக அறிவிக்கை நாள் வெளியிடப்படும்.

- ஆந்திரப்பிரதேசத்தின் அடுத்த மாநிலத்திற்கு முதல் ஆண்டில் வளங்களுக்கான இடைவெளி ஏற்பட்டால், குறிப்பாக, நியமன நாள் மற்றும் இந்திய அரசினால் நிதி ஆணைய பரிந்துரைகள் ஏற்கப்பட்ட நாளுக்கு இடையே, 2014-15 ஆம் ஆண்டின் பொது பட்ஜெட்டில் இழப்பீடு வழங்கப்படும்.

# திருப்பதி, நெல்லூர் மற்றும் அமராவதியில் பிரதமர் நரேந்திர மோதியின் உறுதிமொழிகள்

## திருப்பதி

"தலைநகர் தில்லி சிறியதாக தோன்றும் வகையில் இந்த புதிய தலைநகர் உருவாக்கப்படும் என்பதை ஸ்ரீ சந்திரபாபு நாயுடுவிடம் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்"

## நெல்லூர்

" வளர்ச்சிக்காக, சீமாந்திரா சிறப்பு பேக்கேஜை பெற்றுள்ளது . என்னை நீங்கள் தில்லியில் அமர்த்தினால், உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதுடன் அது அதிகப்படுத்தப்படும்"

## அமராவதி

" ஜனநாயகத்தின் கோவிலான நாடாளுமன்றத்தின் மண்ணை பெற்றுள்ளேன். யமுனையில் இருந்து நீரை பெற்றுள்ளேன். இது உணர்வுப்பூர்வமானது மட்டுமில்லை, அமராவதி வரை தில்லியின் அடைந்துள்ளதாகும். புதிய உயரத்திற்கு செல்வதற்கு அனைத்து காலங்களிலும், அமராவதியின் வளர்ச்சி பயணத்திற்கான முயற்சிகளுக்கு, அமராவதிக்கு தில்லியின் தொடர் ஆதரவுக்கான குறியீடாகும்"

" புனரமைப்பு சட்டத்தில் உள்ள அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்று அமராவதி நிலத்தில் இருந்து நான் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். குறிப்பிட்ட காலத்திற்குள் அமராவதியின் கனவுகள் நனவாகும்"